**MCOP NO:3318/2016 DATE:16.02.2024**

ம.சா.1

பெயர்.முத்து பாண்டி

த/பெ.திரு.தில்லைபழம்

வயது. 34

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். தற்போது என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 7 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் விபத்து சமயத்தில் இருசக்கர வாகனம் ஓட்டி சென்றேன், எதிரே வந்த டாடா ஏசி வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. விபத்து ரோட்டின் நடுபகுதியில் நடந்தது என்றால் சரிதான். நான் கவனமாக ரோட்டின் ஓரத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்று இருந்தால் இந்த விபத்து ஏற்பட்டு இருக்காது என்றும், என்னுடைய கவனகுறைவால் விபத்து நடந்தது என்றும், சொன்னால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கை, மாதிரி வரைபடம், விபத்து பதிவேடு, என்னுடைய வாகனத்திற்கு உரிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் வேறு ஒருவடையது. அதற்கான பதிவு சான்று, காப்பீடு சான்று, தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் நிலுவையில் இல்லை என்பதால் தான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தொழில், வருமானம், வருமான இழப்பு குறித்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு தலை, வலது காலில் அடிபட்டது. நான் தலைகவசம் அணிந்து சென்று இருந்தால் எனக்கு தலையில் அடிபட்டு இருக்காது என்றும், நான் தலைகவசம் அணியவில்லை என்றும், சொன்னால் சரியல்ல. 25.05.2015 பிறகு தொடர் சிகிச்சைக்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரே வந்த டாடா ஏசி வாகனத்திற்கு பர்மிட் மற்றும் தகுதி சான்று இல்லை என்பதால் காப்பீடு விதிமீறல் உள்ளது என்றும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைபட்டவர் அல்ல என்றும், சொன்னால் சரியல்ல. ஏதேனும் நஷ்டஈடு கொடுக்க

வேண்டும் என்றால் 1ம் எதிர்மனுதாரர் தான் கொடுக்க கடமைபட்டவர் என்று சொன்னால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.